செ.வெ.எண்.31 நாள்: 23.12.2019

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் தொடர்பான நுண் பார்வையாளர்களுக்கு பயிற்சி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் தூத்துக்குடி மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல் பார்வையாளர் திரு.சம்பத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் தொடர்பான நுண் பார்வையாளர்களுக்கு பயிற்சி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் தூத்துக்குடி மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல் பார்வையாளர் திரு.சம்பத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.12.2019) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி தூத்துகுடி மாவட்டத்தில் 2 கட்டங்களாக ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெறுகிறது. முதல் கட்டமாக 27.12.2019 அன்றும், இரண்டாம் கட்டமாக 30.12.2019 அன்றும் நடைபெறுகிறது. முதல் கட்ட தேர்தலில் 7 ஊராட்சி ஒன்றியங்களுக்கும், இரண்டாம் கட்டத்தில் 5 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடத்தப்படுகிறது. நடைபெறவுள்ள 2 கட்ட தேர்தலில் 17 மாவட்ட ஊராட்சி வார்டுகளுக்கும், 174 ஊராட்சி ஒன்றிய வார்டுகளுக்கும், 403 ஊராட்சி தலைவர் பதவிகளுக்கும், 2943 ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் என மொத்தம் 3537 பதவிகளில் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்ட 1130 பதவிகள் தவிர பிற பதவிகளுக்கு தேர்தல் நடத்தபடுகிறது. முதல் கட்ட தேர்தலில் தூத்துக்குடி, கருங்குளம், சாத்தான்குளம், உடன்குடி, திருவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, திருச்செந்தூர் ஆகிய 7 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் உட்பட்ட 1542 பதவிகளுக்கும், இரண்டாம் கட்ட தேர்தலில் கோவில்பட்டி, கயத்தார், ஒட்டப்பிடாரம், விளாத்திகுளம், புதூர் ஆகிய 5 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் உட்பட்ட1995 பதவிகளுக்கும் என மொத்தம் 3537 பதவிகளுக்கு 2 கட்டங்களாக நான்கு வகையான பதவிகளுக்கு தேர்தல் நடத்தப்படுகிறது. முதல் கட்டமாக 824 வாக்கு சாவடிகளில், இரண்டாம் கட்டமாக 994 வாக்குச்சாவடிகளில் என 1818 வாக்குசாவடிகளில் தேர்தல் நடைபெறுகிறது. தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி 378 வாக்குசாவடி மையங்கள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளது. மேலும் பதற்றமான வாக்குசாவடிகளில் வெப் கேமரா அல்லது மைக்ரோ அப்சர்வர் அல்லது வாக்குசாவடிகளில் வீடியோ கவரேஜ் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள பதற்றமான வாக்குசாவடிகளில் வெப் கேமரா அல்லது மைக்ரோ அப்சர்வர் அல்லது வாக்குசாவடிகளில் வீடியோ கவரேஜ் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதல் கட்ட வாக்குப்பதிவில் கலந்துகொள்ளும் நுண் பார்வையாளர்களுக்கு 26.12.2019 அன்று எந்த வாக்குசாவடியில் பணியாற்ற வேண்டும் என்பதற்கான உத்தரவு கடிதமும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் கலந்துகொள்ளும் நுண் பார்வையாளர்களுக்கு 29.12.2019 அன்று எந்த வாக்குசாவடியில் பணியாற்ற வேண்டும் என்பதற்கான உத்தரவு கடிதமும் வழங்கப்பட உள்ளது. ஏற்கனவே நடைபெற்ற நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தலில் உள்ள வழிமுறைகள்தான் தற்போது நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தலில் கடைபிடிக்கப்படுகிறது. குறிப்பாக தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மனதில்

வைத்து சிறப்புடன் பணியாற்ற வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட தேர்தல் பார்வையாளர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி தூத்துக்குடி மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் தொடர்பான பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக பதற்றமான வாக்குசாவடிகளில் வெப் கேமரா அல்லது மைக்ரோ அப்சர்வர் அல்லது வாக்குசாவடிகளில் வீடியோ கவரேஜ் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் முதல் கட்டத்தில் 44 நுண் பார்வையாளர்களும், இரண்டு கட்டத்தில் 82 நுண் பார்வையாளர்கள் என மொத்தம் 126 நபர்கள் தேர்தல் பணியில் ஈடுபட உள்ளார்கள். இவர்களுக்கு இன்று வாக்குப்பதிவு நாளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டது. இதனை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு சந்தேகங்கள் ஏதும் இருந்தால் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். நாம் மேற்கொள்ளும் அனைத்து பணிகளையும் மாநில தேர்தல் ஆணையம் கண்காணித்து வருகிறது என்பதை தெரிந்துகொண்டு தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி பணியாற்ற வேண்டும். வாக்குப்பதிவு நாள் முன்கூட்டியே வாக்குசாவடி மையங்களுக்கு அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை பார்வையிட வேண்டும். வாக்குசாவடி மையங்களில் ஒரு கட்சிக்கு ஒரு முகவர் இருக்க அனுமதி உண்டு. இதனை நீங்கள் பார்வையிட்டு உறுதி செய்ய வேண்டும். மேலும், அனுமதி சீட்டு பெற்ற முகவர்கள் மட்டும்தான் உள்ளே அனுமதிக்க வேண்டும். வாக்குப்பதிவு அலுவலர்கள் மேற்கொள்ளும் அனைத்து பணிகளையும் நீங்கள் கண்காணிக்க வேண்டும். வாக்குப்பதிவு நடைபெறும் நாளில் ஏதேனும் அசம்பாவித சம்பவங்கள் ஏற்பட்டால் உடனடியாக தேர்தல் பார்வையாளரிடம் தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும் என மாவட்ட தேர்தல் பார்வையாளர் அவர்கள் பேசினார்.

கூட்டத்தில் மகளிர் திட்டம் திட்ட இயக்குனர் திருமதி.ரேவதி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர்கள் திரு.சந்திரசேகரன் (உள்ளாட்சி தேர்தல்), திரு.பாலசுப்பிரமணியன் (வளர்ச்சி), தேர்தல் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பொற்செழியன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.யோகானந்த் மற்றும் நுண் பார்வையாளர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.